# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

சுட்டெண்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

01. **ஒல்காப் பெரும்புகழ்........** என்று புகழப்பட்ட நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) நாலடியார் ஈ) தொல்காப்பியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

02. அழகொடு மலர்ந்து நின்று உருத்திரமூர்த்தியைக் கவர்ந்த மலர்

அ) சம்பங்கி ஆ) அல்லி இ) முல்லை ஈ) காட்டுமல்லிகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

03. தீந்தமிழ் என்பதைப் பிரித்து எழுதினால்

அ) தீன் + தமிழ் ஆ) தீம் + தமிழ்

இ) தீந் + தமிழ் ஈ) தீன் + தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

04. குயில் கூவும். அதுபோல் மயில்

அ) அலறும் ஆ) கரையும் இ) கூவும் ஈ) அகவும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

05. பாண்டியரது முடியைக் கைப்பற்றுவதற்காக இராசராசசோழன் படையெடுத்த நாடு

அ) இலங்கை ஆ) இந்தியா இ) மலேசியா ஈ) பர்மா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

06. **வைதல்** என்பது

அ) ஏசுதல் ஆ) பாடுதல் இ) வருதல் ஈ) அடித்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

07. **எழுதினாள்** என்ற வினைச்சொல்லின் வினையடி

அ) எழுது ஆ) எழு இ) எழுதிய ஈ) எழுதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

08. ஆங்கிலேயப் படைகள்மீது குலசேகரமுதலியாரின் படையணி தாக்குதல் தொடுத்த இடம்

அ) முல்லைத்தீவு ஆ) மூதூர் இ) மன்னார் ஈ) மட்டக்களப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

09. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) பொன்விழா ஆ) வைரவிழா இ) வெள்ளிவிழா ஈ) பவளவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. புதிதாகத் தோன்றிய இலையின் பருவத்தைக் குறிக்கும் சொல்

அ) கொழுந்து ஆ) பழுப்பு இ) சருகு ஈ) தளிர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. **ஆடிப்பிறப்பன்று கூழ்காய்ச்சி மகிழ்ச்சியாகக் குடித்தோம்.**

இச் சொல்லியத்தில் வந்துள்ள அடைமொழி

அ) கூழ் ஆ) குடித்தோம் இ) மகிழ்ச்சியாக ஈ) ஆடிப்பிறப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. கயல் போன்ற விழி என்ற உவமையணியில் இடம்பெற்றுள்ள உவமேயம்

அ) போன்ற ஆ) விழி இ) அழகு ஈ) கயல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. வன்னிக் குறுநில அரசுகள் ____________________ மேலாண்மையை ஏற்றிருந்தன.

அ) யாழ்ப்பாணஅரசின் ஆ) கண்டியரசின்

இ) கோட்டையரசின் ஈ) மலையக அரசின்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. திருத்தக்கதேவர் எழுதிய நூல்

அ) திருக்குறள் ஆ) மணிமேகலை

இ) சீவகசிந்தாமணி ஈ) குண்டலகேசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. **'யாழ்ப்பாண வைபவ கௌமுகி'** என்ற நூலை எழுதியவர்

அ) காளமேகப்புலவர் ஆ) கல்லடிவேலுப்பிள்ளை

இ) ஆறுமுகநாவலர் ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. **அண்ணா! இங்கே வாருங்கள்!** இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ளது

அ) 8 ஆம் வேற்றுமை ஆ) 2 ஆம் வேற்றுமை

இ) 3 ஆம் வேற்றுமை ஈ) 4 ஆம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. வெள்ளூர்ப்போரில் பராந்தகசோழனால் தோற்கடிக்கப்பட்ட பாண்டிய மன்னன்

அ) காசியப்பன் ஆ) இராசசிம்மன்

இ) சிறிமாறவல்லபாண்டியன் ஈ) தப்புலன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. அஞ்சி என்ற பெயர் கொண்டபோதும் அஞ்சாத வரிப்புலியாய் வாழ்ந்தவன்

அ) சேரமான் ஆ) அதியர்மான் இ) பாரி ஈ) குமணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. காலநிலை என்பது

அ) கெடுதல் புணர்ச்சி　　ஆ) திரிதல்புணர்ச்சி

இ) இயல்புப் புணர்ச்சி　　ஈ) தோன்றல் புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. அணிலின் இளையது பிள்ளைபோல புலியின் இளையது

அ) பறள்　ஆ) பேத்தை　இ) கன்று　ஈ) குட்டி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. **நீர் வாழ்க!** என்பது

அ) ஏவல்வினை　　ஆ) குறிப்பு வினை

இ) எதிர்மறைவினை　　ஈ) வியங்கோள்வினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. எண்ணிக் குழிவெட்டி இடுப்பொடிஞ்சி நிற்பவன்

அ) தோட்டத்துரை　ஆ) கண்காணி　இ) தொழிலாளி　ஈ) முதலாளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. வாழையும் தெங்கும் குலைதாங்கி நின்றன. இதில் தெங்கு என்பது

அ) கமுகு　ஆ) தென்னை　இ) பனை　ஈ) கரும்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. நிழலின் அருமை வெய்யிலில் தெரியும் என்ற பழமொழி குறிப்பது

அ) முயற்சியின்றி உயர்ச்சி இல்லை.

ஆ) உறவினர்குறை பாராட்டக்கூடாது.

இ) தன்னிடம் இருப்பதைத் தான் அறியாமை.

ஈ) ஒன்று இல்லாதபோதுதான் அதன் அருமை தெரியும்.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. **ஓ, உம், தோறும்** என்னும் சொற்கள்

அ) பெயர் ஆ) வினை இ) உரி ஈ) இடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **பள்ளி விடுமுறைக்குச் சென்று இனிய தமிழீழத்தைப் பார்த்தேன்.**

இச்சொல்லியத்தில் இடம்பெறாத சொல்லிய உறுப்பு

அ) பயனிலை ஆ) அடைமொழி

இ) செயப்படுபொருள் ஈ) எழுவாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பின்வருவனவற்றில் கிறித்தவநெறி இலக்கியம் அல்லாதது

அ) தேம்பாவணி ஆ) இரட்சணிய யாத்திரீகம்

இ) திருவருட்பா ஈ) இயேசுகாவியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. ஆனிரை மேய்ப்போரை ______________ என அழைப்பர்.

அ) இடையர் ஆ) கூத்தர் இ) பாணர் ஈ) உழவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. காளமேகப் புலவர் வாழ்ந்த நூற்றாண்டு

அ) 12 ஆ) 10 இ) 16 ஈ) 15

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஓட்டுநர்கள் என்பது

அ) ஆண்பால் ஆ) பலர்பால் இ) பெண்பால் ஈ) பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஆங்கிலேயர் கி.பி19ஆம் நூற்றாண்டின் காலப்பகுதியில் ஆசியநாடுகளுக்குப் படையெடுத்தனர். அக்காலத்தில் அவர்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் தங்கள் வல்லாதிக்கத்தைச் செலுத்தினர். அந்நேரம் தமிழ்நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்து வேலுநாச்சியார் போரிட்டார். ஆங்கிலேயரின் அதியுயர் சக்திவாய்ந்த போர்க்கருவிகளுக்கு முன்னால் வேலுநாச்சியார் படைகளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அவர்கள் தோல்வியின் விளிம்பில் நின்றுகொண்டிருந்தனர். ஆங்கிலேயரின் போர்க்கருவிகளின் கிடங்கில் ஆயிரக்கணக்கான சுடுகலன்கள், வெடிமருந்துகள் என்பன குவிக்கப்பட்டிருந்தன. செய்வதறியாது திகைத்து நின்றது வேலுநாச்சியார் படை. அப்போது திடீரென ஓர் உருவம் எரிநெய்யைத் தன் உடலில் ஊற்றிக்கொண்டு ஆங்கிலேயரின் போர்க்கருவிகள் இருந்த கிடங்கில் குதித்தது. அப்போது போர்க்கருவிகள் அனைத்தும் வெடித்துச் சிதறின. அவ்வுருவமும் வெடித்துச் சிதறியது. ஆங்கிலேயரின் உயர்தரப் போர்க்கருவிகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. அதனால் ஆங்கிலேயர் பெருந் தோல்வியைத் தழுவிக்கொண்டனர். ஆங்கிலேயரின் போர்க்கருவிகளை அழித்து வெடித்துச் சிதறிய அந்த உருவம்தான் ஈகைஒளி, வீரத்திருமகள் குயிலி.

1. தமிழ் நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியவர் யார்?

   ____________________

2. ஆங்கிலேயர் எங்கெங்கு தமது வல்லாதிக்கத்தைச் செலுத்தினர்?

   ____________________

   ____________________

3. தோல்வியின் விளிம்பில் நின்றுகொண்டிருந்த படை எது?

   ____________________

4. எரிநெய்யைத் தன் உடலில் ஊற்றிக்கொண்ட உருவம் எங்கே குதித்தது?

   ____________________

   ____________________

5. எக்காலப்பகுதியில் ஆங்கிலேயர் ஆசிய நாடுகளுக்குப் படை எடுத்தனர்?

   ____________________

**புள்ளிகள் 10**

**3) பாடநூல் வினாக்கள் ஏழில் - ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தென்திசையைப் பார்க்கின்றேன் என் சொல்வேன்.....
   என்ற பாடல் யாரால் யாரை நினைத்துப் பாடப்பட்டது ?

2. இலங்கை சோழநாட்டின் ஒரு மாநிலமாக்கப்பட்டதால் எவ்வாறு அழைக்கப்பட்டது?

3. ஆனைந்தும் எவை ?

4. குறள்:- ***முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து***
   ***அகம்நக நட்பது நட்பு***

   இக்குறளின் பொருளைத் தருக.

5. ஐரோப்பியர் இலங்கைக்கு வரும்போது அங்கிருந்த அரசுகள் எவை?

6. தமிழ்மொழியை வளர்ப்பதற்காக அமைக்கப்பட்ட முக்கழகங்களும் எவை?

7. ஈழத்தில் அருளாண்மை வழியில் அறங்கேட்டு உண்ணா நோன்பிருந்த பெண்மணி யார்?

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை முழுமை ஆக்குக.**

# தமிழ்த் தாய்

| | | | | |
|---|---|---|---|---|
| அவள் | பகைவர்கள் | கண்களும் | சொன்னாள் | கேட்க |

*எழுந்து வந்தாள் எனை நோக்கி*

*இரண்டு ______________ அனலாக்கி*

*அவள் கொண்ட பார்வையோ தணலாக*

*நான் நின்றேன் ______________ முன் சிலையாக*

*என் உள்ளம் துடி துடித்தது*

*ஏதோ கேள்வி ______________ நினைத்தது*

*மெல்ல வினவினேன் யாரம்மா நீ என்று*

*மெதுவாகச்______________ உன் தமிழ்த்தாய் என்று*

*கொல்ல நினைக்கிறார் என்னை*

*கொடிய ______________ என்றாள் அன்னை*

*அள்ளி அணைத்தேன் என் தமிழ்த்தாயை*

*அம்மா உனை நான் காப்பேன் என்றேன்*

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

காலவாகுபெயர் :- ______________________

இடவாகுபெயர் :- ______________________

2. பின்வரும் மரபுத் தொடர்களின் உட்பொருளைத் தருக.

ஒற்றைக் காலில் நிற்றல் :- ______________

அள்ளி இறைத்தல் :- ______________

தோள் கொடுத்தல் :- ______________

3. இணைமொழிகளின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக

சீருஞ்சிறப்பும் :- ______________________

______________________

சாக்குப் போக்கு :- ______________________

______________________

4. எடுத்துக்காட்டுத் தருக.

இறந்தகாலப் பெயரெச்சம் :- ______________

எதிர்மறைவினையெச்சம் :- ______________

எதிர்மறைப் பெயரெச்சம் :- ______________

5. பின்வரும் வினைமுற்றுகளின் திணை, பால், இடம் என்பவற்றைத் தருக.

| வினைமுற்று | திணை | பால் | இடம் |
|---|---|---|---|
| ஆடுகிறது | | | |
| கண்டீர்கள் | | | |

புள்ளிகள் 15

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Sommeren er kommet. Der er blomstret blomster på træerne. De er i flere farver. Man kan se fugle og kaniner på den grønne græs. Flotte hvide kaniner leger. Fuglerne flyver oppe. Det føles dejligt at se det hele.

Summer season has come. Flowers have bloomed on trees. They are in different colours. There are birds and rabbits in the green meadow. Pretty white rabbits are playing there. Birds are flying above. Seeing this scenery make us happy.

L'été est arrivé. Les arbres ont fleuris et sont toutes les couleurs. On voit des oiseaux et des lapins sont dans un pré vert. On y voit des lapins blancs magnifique qui jouent et des oiseaux volant dans le ciel. Cela nous fait plaisir de les voir.

Die Sommerzeit ist erschienen. Auf den Bäumen blühen Blumen. Es gibt sie in vielen Farben. Auf grünen Wiesen sind Vögel und Hasen zu erkennen. Schöne weiße Hasen spielen. Vögel fliegen in der Höhe. Es macht sehr glücklich dies zu beobachten.

De zomertijd is aangekomen. Er zijn bloemen gebloeid in de bomen. Die zijn in verschillende kleuren. Er zijn veel vogels en konijnen te vinden in het groene grasveld. De mooie, witte konijn zijn aan het spelen. De vogels vliegen in de lucht en dat is mooi om te zien.

É arrivata l'estate. Sugli alberi sono sbocciati i fiori. Ci sono fiori di diversi colori. Vediamo uccelli e conigli sui prati verdi. Giocano dei bei conigli bianchi. Nel cielo volano gli uccelli. Vedere tutto questo rende molto felici.

Sommertiden er begynt. Det er mye blomster på trærne. De er i mange farger. I det grønne landsskapet er det fugler og kaniner. Pene hvite kaniner leker og fuglene flyr. Dette gir glede.

Sommaren har kommit. På träden har blommorna blommats. De består av flera färger. På den gröna ängen syns fåglar och kaniner. Vackra vita kaniner leker. Fåglar flyger där uppe. Att se på det här är glädjande.

புள்ளிகள் 05

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இலங்கைத்தீவில் தமிழர் ஆட்சியும் மாட்சியும்பற்றி நீர் அறிந்து கொண்டவை.
- உமது வாழிடப்பள்ளி.
  உமக்குப் பிடித்தவை, பிடிக்காதவை.
- மழை
  மழை பெய்வதினால் ஏற்படும் நன்மைகள், தீமைகள்.

புள்ளிகள் 20